(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவரவர்களே, அந்த நிலத்தின் விலை 7,000 ரூபாய் அல்ல. 7,000 என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் 5,000 ரூபாய்க்குத் தான் பத்திரப் பதிவு ஆகியிருக்கிறது. 15,000 ரூபாய் கைடு லைன் பிரைஸ் என்றாலும் அதைவிடக் குறைத்துப் பதிவு செய்வதாக இருந்தால் வித்தியாசமான தொகைக்கும் சேர்த்து ரெஜிஸ்ட்ரேஷன் பீஸ் செலுத்திவிட்டால் அதைப் பதிவாளர் ஏற்றுக் கொள்வது வழக்கம். ஆகவே என்ன நடந்தது என்று விசாரித்துப் பார்க்கலாம்.

சென்னையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு சிலை.

95—(*வினா எண் 244)—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு சிலை வைக்கும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு. பி. என். வல்லரசு: தலைவரவர்களே, தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் வெங்கலச் சிலையானது சென்னை எழும்பூரில் வைக்கப்பட வேண்டும் என்று அண்ணா தி.மு.க. ஆட்சியிலும், கவர்னர் ஆட்சியிலும் தொடர்ந்து வற்புறுத்தப்பட்டது. இந்த ஆட்சியிலும் முறையீடு செய்யப்பட்டுள்ளது. சிலை பொதுமக்களால் செய்யப்பட்டுகிறது. தேவர் திருமகனார் பெயரில் மாவட்டத்தை உருவாக்கிய தமிழக அரசு அவருடைய சிலையையும் திறக்க வேண்டுமென்ற காரணத்தால், இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். எனவே தேவர் திருமகனார் சிலையை வைக்க சென்னை எழும்பூரில் இடம் ஒதுக்கீடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: தலைவரவர்களே, சிலை பொதுமக்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். எக்மோர் பகுதியிலே ஏதாவது ஒரு இடத்தில் சிலையை நிறுவுவதற்கு அனுமதி வழங்கவேண்டுமென்ற

1989 ஏப்ரல் 21]

வேண்டுகோளையும் சொல்கிறார்கள். சட்ட விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டு வருமானால் அந்த வேண்டுகோள் அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, பசும்பொன் தேவர் திருமகனார் பெயரில் ஏதாவது ஒரு பல்கலைக் கழகம் உருவாக்கப்படுமா? அல்லது ஒரு பல்கலைக் கழகத்திற்கு பசும் பொன் தேவர் பல்கலைக்கழகம் என்று பெயர் சூட்டும் உத்தேசம் அரசுக்கு உ டா?

மாண்புமிகு திரு. பொன்முத்துராமலிங்கம்: தலைவரவர்களே, அத்தகைய வேண்டுகோள்களை எல்லாம் முற்றிலும் உணர்ந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுப்பார்கள்.

திரு. ஆர். சிங்காரம்: தலைவரவர்களே, இங்கே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய சிலை கடந்த காலத்தில் உடைக்கப்பட்டது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாதது. சிலை என்ற சொல் வந்தவுடனே ஊரில் இருக்கிற சிலைகளை எல்லாம் சொல்லக்கூடாது. இது பற்றி ஏற்கெனவே அவையில் விவாதிக்கப்பட்டிருப்பதால் எழுப்ப வேண்டாம்.

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவர் திருமகனாருடைய சிலையை அமைப்பதற்கு முறையான வேண்டுகோள் வராவிட்டாலும் கூட தமிழ்நாட்டில் சென்னையில் தேசியத் தலைவர்களுக்கு ஏற்கெனவே கழக ஆட்சியிலும் அதைத் தொடர்ந்து பின் வந்த ஆட்சியிலும் சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போன்று அரசாங்கமே முன்வந்து சென்னை கடற்கரையில் ஏதாவது ஒரு அழகிய இடத்தில் தேவர் திருமகனார் சிலையை வைக்க உத்தேசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அண்ணா அவர்களுடைய காலத்தில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றபோது கடற்கரையில் வைக்கப்பட்ட சிலைகளும் அதற்குப் பிறகு வைக்கப்பட்ட சிலைகளும் கூட அரசாங்கத்தின் சார்பிலே வைக்கப்பட்ட சிலைகள் அல்ல. பொது மக்கள் அல்லது நிறுவனங்கள் அல்லது தனியார்கள்—அவர்களுடைய முயற்சியால் வைக்கப்பட்ட சிலைகள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: தலைவர் அவர்களே, தனியார் செய்து கொடுக்கின்ற சிலையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடற்கரையில் பல தலைவர்களுடைய சிலைகளை வைத்திருப்பதுபோல் ஏதாவது ஒரு இடத்தை ஒதுக்கி தேவர் திருமகனார் சிலையை வைக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஏற்கெனவே திரு. வல்லரசு கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் அளித்திருக்கிறார். முறையான கோரிக்கை வருமானால் முறையான இடத்தில் வைக்க முறையாக ஆலோசிக்கப்படும்.

திரு. கே. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் சிலை வைப்பது பற்றி சில நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருந்தன. அந்த நிபந்தனைகள் இந்த ஆட்சியிலும் தொடர்ந்து பின்பற்றப்படுமா?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிபந்தனைகள் என்றால் கடந்த ஆட்சியில் என்ன நிபந்தனைகள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளக்கிச் சொன்னால்தான் அந்த நிபந்தனைகள் இப்போது அமுலில் இருக்கின்றனவா இல்லையா என்று விளக்கிட முடியும்.

வேடசந்தூர் வட்டம் எம். பி. டெக்ஸ்டைல்ஸ் மில் தொழிலாளர்கள் வழக்கு.

96—(*வினா எண். 383) திரு ப. முத்துசாமி: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், வேடசந்தூர் வட்டம் எம். பி. டெக்ஸ்டைல்ஸ் மில்லில் வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களின் வழக்கு நீண்ட காலமாக தொழில் நீதிமன்றத்தில் நடந்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இவ்வழக்கை முடித்து தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ); அந்த எம். பி. டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் வேலையிழந்த 14 தொழிலாளர்கள் சார்த்து தொழில் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. அந்த வழக்கின் முடிவினை எதிர் பார்த்து பணியை அவர்களுக்கு வழங்குகிற நிலைமை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் அவர்கள் 7, 8 பேர்கள் மட்டுமல்ல. ஆரம்பத்தில் 300-க்கு மேற்பட்டவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு தொழில் கோர்ட்டுக்குப் போன பிறகு, நீண்ட இடைவெளி ஆனதால் 9